சிவகங்கை மாவட்ட ஆட்சியரின் செயலாணைகள்

பிறப்பிப்பவர் : திரு.ப.மதுசூதன்ரெட்டி, இ.ஆ.ப.,

ந.க.ப்பி3/**15141/** 2018 நாள்: 12.01.2022

**பொருள்** : பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படை பணி நியமனம் - சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் - பணியில் இருக்கும் போது காலமான வெள்ளியங்குன்றம் ஊராட்சி செயலர் திரு.தி.கதிரேசன் என்பவரின் மகன் திரு.க.பிரவின் - இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் - பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

**படிக்கப் பட்டவை** :

1. அரசாணை (நிலை) எண்: 18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள்: 23.01.2020.
2. சென்னை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.5279/2018/டி1, நாள்: 02.08.2018.
3. சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.ப்பி3/15141/2018, நாள்:14.08.2018.
4. சென்னை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.41760/2019/டி3, நாள்: 29.01.2020.
5. அரசாணை (நிலை) எண்: 48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள்: 26.02.2021.
6. சென்னை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.18355/2021/டி2, நாள்: 18.12.2021.

*****

**ஆணை:**

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், வெள்ளியங்குன்றம் ஊராட்சியில், ஊராட்சி செயலராகப் பணிபுரிந்து 23.11.2016 அன்று பணியிடைக் காலமான திரு.தி.கதிரேசன் என்பவரின் மகன் திரு.க.பிரவின், என்பவருக்கு மேலே படிக்கப்பட்ட இரண்டாவதாக காணும் கடிததத்தின்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கிட கோரிய தனியரின் விண்ணப்பத்தினை சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்கு மாறுதல் செய்திட அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இம்மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், மேலே படிக்கப்பட்ட மூன்றாவதாக காணும் செயல்முறையின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, 15.08.2018 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், தனியரின் பணியை வரன்முறைசெய்து சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் ஒருநிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் அவரவர் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை வெளியிட்டு தொடர்புடைய அரசுப் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டுமென படிக்கப்பட்ட 5-ல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து படிக்கப்பட்ட 6-ல் காணும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட இளநிலை உதவியாளர் பதவிக்கான பணிநியமன அலுவலர்

Scanned by PDF Scanner

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) என்ற நிலையில், மாவட்ட ஆட்சித் தலைவர்களால் பணிநியமனம் வழங்கப்பட்டிருப்பினும், மாவட்ட ஆட்சித் தலைவர்களே இளநிலை உதவியாளர்களுக்கு பணிவரன்முறை செய்திட ஆணை வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண் பருவம் முடித்த பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.க.பிரவின், கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 26.12.2016 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 26.05.1993 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரது வயது 23 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 25 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை எனத் தெரிவித்து, மேலே படிக்கப்பட்ட 4-ல் காணும் கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்ட முன்மொழிவானது படிக்கப்பட்ட 5-ல் காணும் அரசாணையின்படி நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டு மீளப் பெறப்பட்டுள்ளது.

மேலே படிக்கப்பட்ட 6-ல் காணும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு உரிய அசல் ஆவணங்களுடன் மீள பெறப்பட்ட முன்மொழிவானது முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.க.பிரவின் என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 15.08.2018 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து இதன்வழி ஆணையிடப்படுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென சான்றளிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர்
சிவகங்கை

12/01/2022

பெறுநர்:

திரு.க.பிரவின்
இளநிலை உதவியாளர்,
மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சிப் பிரிவு),
சிவகங்கை.
-(அலுவலகத் தலைவர் மூலமாக)

நகல்:

இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்,
சென்னை - 15.

நகல்:

"ப்பி4" பிரிவுக்கு

நகல்:

"ப்பி3" இருப்புக் கோப்பிற்கு

ந.க.பி4/23111/19 நாள். 02.22